# மாகாணக் கல்வித் திணைக்களம் – வடக்கு மாகாணம்

**தரம் - 09**

**மூன்றாந் தவணைப் பரீட்சை – 2018**

**சுட்டெண் :** ..........................

குடியியற் கல்வி I, II — **இரண்டு மணித்தியாலம்**

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

பகுதி I

01. இலவச மண்ணில் இலவச ஊழியம் (Free Labour in free soil) என்பதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொண்ட முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி
    1. ஜிம்மிக்காட்டர் 2. ஆபிரகாம் லிங்கன்
    3. வூட்ரோ வில்சன் 4. ஜோன்.எப்.கெனடி
02. ஒரு நாடு தமது தேச எல்லைக்குள் அதிகாரம் செலுத்தக் கூடியவாறு அமுல்செய்யப்படும் சட்டம்.
    1. தேசிய சட்டம் 2. சர்வதேச சட்டம்
    3. அரசியலமைப்புச் சட்டம் 4. குற்றவியல் சட்டம்
03. நிறுவனங்களால் வழங்கப்படும் மாதிரிகளைப் பரீட்சித்துப் பகுப்பாய்வு அறிக்கையைத் தயாரிப்பதற்கான விடய நிபுணர்களை உள்ளடக்கிய வகையில் செயற்படும் திணைக்களம்
    1. சுகாதாரத் திணைக்களம்
    2. அரசாங்க இராசயனப் பகுப்பாய்வுத் திணைக்களம்
    3. மதுவரித் திணைக்களம்
    4. பொலிஸ் திணைக்களம்
04. இலங்கையின் தற்போதய நீதி மன்றக் கட்டமைப்பில் அதி உயர்நிலையில் உள்ள நீதி மன்றம் எது?
    1. மாகாண மேல் நீதி மன்றம் 2. மேன் முறையீட்டு நீதி மன்றம்
    3. உயர் நீதி மன்றம் 4. மேல் நீதி மன்றம்
05. சிறுவர் துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பான தகவல்களைக் கொடுப்பதற்கான நேரடித் தொலைபேசி இலக்கம்
    1. 1919 2. 1929 3. 1119 4. 2919
06. நாட்டில் நிலவக் கூடிய சமூக, பொருளாதார, கலாசார, சுற்றாடல் கோலத்துக்கு ஏற்ப தொழினுட்பங்களைப் பயன்படுத்துவது
    1. பேண்தகு தொழில்நுட்பம் 2. மூலதனச் செறிவான தொழில் நுட்பம்
    3. ஊழியச் செறிவான தொழில்நுட்பம் 4. நடுத்தரத் தொழில்நுட்பம்

07. சக வாழ்வுக்கான பண்பாக அமைவது பின்வருவனவற்றில் எது
1. சட்டத்தை மதித்தல் 2. எளிமையான வாழ்க்கை
3. தியாக மனப்பான்மை 4. அடுத்தவரை மதித்தல்

08. இலங்கையின் முதலாவது கூட்டுறவுச் சங்கம் 1906இல் ஆரம்பிக்கப்பட்டது அது ஆரம்பிக்கப்பட்ட இடம் எது?
1. களணி 2. தெல்தெனியா 3. தம்புள்ள 4. யாழ்ப்பாணம்

09. “சனநாயகம் அனைவருக்கும் உரிமைகளைப் பெற்றுத்தரும் ஆட்சி முறையாகும் எனக் கூறிய அறிஞர் யார்?
1. சீலர் 2. ரூசோ 3. டைசி 4. ஜோன்லொக்

10. இரு கட்சி முறை அமுலில் உள்ள நாடுகள் பின்வருவனவற்றில் எது?
1. வடகொரியா, கியூபா 2. இலங்கை, இந்தியா
3. அமெரிக்கா, ஐக்கியஇராட்சியம் 4. தென்கொரியா, ஜப்பான்

11. வேதாளம் என்னும் கற்பனை விலங்கினை அடிப்படையாகக் கொண்ட கலாசாரத்தைப் பின்பற்றும் ஆசியநாடு
1. இந்தியா 2. சீனா 3. யப்பான் 4. தாய்வான்

12. 21 வயது பூர்த்தியான இலங்கைப் பிரஜைகளான ஆண், பெண் இருபாலாருக்கும் சர்வஜன வாக்குரிமையை வழங்கிய யாப்பு எது?
1. டொனமூர் 2. மக்கலம் 3. சோல்பரி 4. கோல்புறூக்

13. இலங்கையில் முதல் முதலில் ஆரம்பிக்கப்பட்ட மாநகரசபை யாது?
1. காலி 2. கொழும்பு 3. யாழ்ப்பாணம் 4. கண்டி

14. உலகில் பொருளாதார அடிப்படையில் எழுந்த மோதலுக்கு உதாரணம் காட்டக்கூடியதாக அமைவது
1. இந்திய பாகிஸ்தான் மோதல்
2. ஈராக் குவைத் மோதல்
3. இஸ்ரேல் பலஸ்தீன மோதல்
4. தென்னாபிரிக்காவின் கறுப்பர் வெள்ளையர் மோதல்

15. சமூக வாழ்க்கைச் செயற்பாடுகளாக அமைவது பின்வருவனவற்றில் எது?
1. தொழில் தொடர்பான செயற்பாடுகள்
2. பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள்
3. பிரதேச அமைப்புக்கள், சங்கங்களில் கலந்து கொள்ளல்
4. தனியார் சுகாதாரம் பேணல்

16. கடன் அட்டையைப் பயன்படுத்துவதன் பிரதி கூலமாக அமைவது பின்வருவனவற்றில் எது?
1. உடனடித் தேவைக்குக் கடன்பெற்றுக் கொள்ளலாம்.
2. பண வருமானத்தைக் காட்டிலும் செலவு செய்யத்தூண்டப்படல்
3. எந்தப்பண அலகிலும் கொடுக்கல் வாங்கல் செய்யலாம்.
4. பட்டியலுக்கான கட்டணத்தை குறித்த தினத்துக்கு முன் செலுத்தி விடலாம்.

17. நகரசபை ஒன்றில் அதிகாரம் மிக்க அரச உத்தியோகத்தர் யார்?
1. ஆணையாளர் 2. செயலாளர்
3. தொழில்நுட்ப உத்தியோகத்தர் 4. முகாமைத்துவ உதவியாளர்

18. தேர்தலில் பிரசைகளின் உரிமை தொடர்பான கூற்று பின்வருவனவற்றில் எது?
   1. தேர்தல் சட்டத்துக்குக் கட்டுப்படல்
   2. தேர்தல் சட்டங்களை செயற்படுத்த உதவுதல்
   3. வெற்றி தோல்வியைச் சமமாக மதித்து அடுத்தவர் உரிமையைப் பாதுகாத்தல்
   4. தேர்தல் இடாப்பில் பெயரைப் பதிவு செய்தல்

19. எமது நாட்டுக்கே உரித்தான விலங்குவகை பின்வருவனவற்றுள் எது?
   1. மணிப்புறா  2. சிறுத்தைப்புலி  3. மயில்  4. முதளை

20. கழியொலி அலகிடலிகள் (Scan Machines) பயன்படுத்தப்படும் துறை எது?
   1. கல்வி  2. சுகாதாரம்  3. வங்கி  4. போக்குவரத்து

(2 x 20 = 40 புள்ளிகள்)

## பகுதி II

- முதலாம் வினா கட்டாயமானது அத்துடன் ஏனைய நான்கு வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. 1. சமூகப் பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்கள் இரண்டு தருக?
   2. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நோக்கங்கள் இரண்டு தருக?
   3. பாடசாலைக் கூட்டுறவு சங்கத்தால் மாணவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய சேவைகள் இரண்டு தருக?
   4. நேரடி ஜனநாயக ஆட்சி முறையை இன்று செயற்படுத்துவதில் காணப்படும் இடையூறுகள் இரண்டை எழுதுக?
   5. தேசிய கொள்கையை ஒரு நாடு கொண்டிருப்பதால் கிடைக்கும் பயன்கள் இரண்டு தருக?
   6. உள்ளூராட்சி மன்றங்கள் மூலதன வளத்தைப் பெறக்கூடிய வழிகள் இரண்டு தருக?

(2 x 6 = 12 புள்ளிகள்)

02. 1. சமூகப் பாதுகாப்பு என்றால் என்ன?

(3 புள்ளி)

   2. சமூகப் பாதுகாப்புக்காக பாடசாலையினால் ஆற்றப்படும் பணிகள் நான்கு தருக?

(4 புள்ளி)

   3. பாதுகாப்புப் படைகள் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஆற்றும் பணிகள் மூன்றைக் கூறி ஒன்றை விளக்குக?

(5 புள்ளி)

03. 1. தொழில் நுட்பம் என்றால் என்ன?

(3 புள்ளி)

2. தொழில் நுட்ப மாற்றத்தால் மனித வாழ்க்கையில் ஏற்பட்ட சாதகமாக மாற்றங்கள் நான்கு தருக?

(4 புள்ளி)

3. பேண்தகு அபிவிருத்தியை ஏற்படுத்துவது தொடர்பில் பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் மூன்றைக் கூறி ஒன்றை விளக்குக?

(5 புள்ளி)

04. 1. மறைமுக ஜனநாயகம் என்றால் என்ன?

(3 புள்ளி)

2. மறைமுக ஜனநாயகத்தின் அடிப்படைப் பண்புகள் நான்கு தருக

(4 புள்ளி)

3. ஜனநாயகத்தின் வெற்றியை உறுதிப்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்றைத் தந்து ஒன்றை விளக்குக?

(5 புள்ளி)

05. 1. இலங்கையில் தற்போது செயற்பட்டு வரும் உள்ளூராட்சி மன்றங்கள் எவை?

(3 புள்ளி)

2. உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகளை நிர்ணயம் செய்யும் பணியில் தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழு ஈடுபடும் போது கவனத்தில் கொள்ளும் காரணிகள் இரண்டைத் தருக?

(4 புள்ளி)

3. தேசிய அபிவிருத்திக்கு உள்ளூராட்சி மன்றங்களால் மேற்கொள்ளப்படும் சேவைகள் மூன்றைக் கூறி ஒன்றை விளக்குக?

(5 புள்ளி)

06. 1. மோதல் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்று தருக?

(3 புள்ளி)

2. மோதல் தீர்விற்குத் தேவையான பண்புகள் நான்கு தருக?

(4 புள்ளி)

3. மோதல் தீர்வுக்கான சிறந்த வழிமுறைகள் மூன்றைக் கூறி ஒன்றை விளக்குக?

(5 புள்ளி)

07. 1. வேலை உலகில் காணப்படும் பல்வேறு வாண்மைத் தொழில்களில் மூன்றைத் தருக?

(3 புள்ளி)

2. தொழிற்பயிற்சி தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான நிறுவனங்கள் நான்கு தருக? (4 புள்ளி)

3. நேர்முகப் பரீட்சை நடைபெறும் வகைகள் எவை? அவற்றில் ஒன்றை விளக்குக?

(5 புள்ளி)